பெண்கள், அமைதி, பாதுகாப்புத் திட்டத்தின் மீதான

இந்தியாவின் அர்ப்பணிப்பு அசைக்க முடியாததாக உள்ளது!

ஐ.நா. சபையின் அமைதி நிறுவல் ஆணையக் கூட்டத்தில் பி.வில்சன் எம்.பி. பேச்சு!

நியூயார்க் , அக். 31 -

“பெண்கள், அமைதி, பாதுகாப்புத் திட்டத்தின் மீதான இந்தியாவின் அர்ப்பணிப்பு அசைக்க முடியாததாக உள்ளது” என்று இந்திய நாடாளுமன்ற மாநிலங்களவை கழக உறுப்பினர் பி.வில்சன் நியூ யார்க்கில் நடைபெற்ற ஐ.நா. சபையின் அமைதி நிறுவல் ஆணையக் கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் நடைபெற்ற பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு குறித்த அமைதி நிறுவல் ஆணையத்தின் தூதர் மட்டக் கூட்டத்தில் பங்கேற்ற இந்தியாவின் நிலைப்பாட்டு அறிக்கை குறித்து மாநிலங்களவை உறுப்பினர், மூத்த வழக்கறிஞர், பி. வில்சன் பேசியதாவது:

பாதுகாப்பு கவுன்சிலின் தீர்மானம் 1325ன் 25ஆம் ஆண்டு நினைவு நாளை ஒட்டி இன்றைய நிகழ்வை ஒருங்கிணைத்ததற்காக, அமைதி நிறுவல் ஆணையத்தின் தலைமை ஜெர்மனிக்கு இந்தியா தனது பாராட்டுகளை தெரிவிக்கின்றது. பெண்கள் சமத்துவத்திற்காக நமீபியா அமைச்சரும், ஐ.நா. மகளிர் அமைப்பின் நிறைவேற்று இயக்கு நரும், மற்றும் மற்ற உரையாளர்களும் தங்களது ஆழமான கருத்துகளையும், பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு (WPS) திட்டத்தை மேலும் வலுப்படுத்த உதவும் மதிப்புமிக்க பங்களிப்பு களையும் வழங்கியதற்காக நன்றி தெரிவிக்கிறோம்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் அமைதிப்படை நடவடிக்கைகளுக்கான முன்னணி பங்களிப்பாளர்களில் ஒன்றாக இருக்கும் இந்தியா, அமைதியை உருவாக்குவதற்கும் நிலை நிறுத்துவதற்கும் பெண்களின் முழுமையான மற்றும் சமமான பங்கேற்பு இன்றியமையாதது என்பதை வலியுறுத்துகிறது. அமைதிக்காப்பு மற்றும் அமைதிநிறுவல் மீதான எங்கள் அர்ப்பணிப்பு, தேசிய உரிமை மற்றும் பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு (WPS) நோக்கங்களின் கொள்கைகளுடன் இணை ந்துள்ளது.

அமைதிக்காப்பு அத்தியாவசிய மானவை!

இந்தியாவின் அமைதிக்காப்பு பாரம்பரியத்தை தனித்துவமாக ஆக்கும் அம்சம் எங்கள் பங்களிப்பின் அளவில் மட்டும் இல்லை, நிலைத்த

அமைதிக்கான இன்றியமையாத செயற்பாட்டாளர்களாக பெண்களை முன்கூட்டியே அடையாளம் கண்டது என்பதிலும் இருக்கிறது.

பாதுகாப்பு கவுன்சிலின் தீர்மானம் 1325 பிறக்கும்முன்பே, 1960களில் இந்திய பெண் மருத்துவ அதிகாரிகள் காங்கோவில் பணியாற்றினர். இது, ஐ.நா. அமைதிப்படைநடவடிக்கைகளில் பெண்கள் பங்கேற்ற முதன்மையான நிகழ்வுகளில் ஒன்றாகவும் பதிவாகிறது. இது ஒரு குறியீட்டு நடவடிக்கை மட்டுமல்ல; மாறாக, பெண்களின் பார்வை, திறன்கள், மற்றும் அவர்களின் பங்கு பயனுள்ள அமைதிக்காப்பு மற்றும் அமைதி நிறுவலிற்கு அத்தியாவசியமானவை என்பதைக் கண்கூடாக அங்கீகரிக்கிறது.

2007 ஆம் ஆண்டு, இந்தியா ஐ.நா.வின் முதல் முழு பெண்கள் கொண்ட காவல் படை பிரிவை (Formed Police Unit) லைபீரியாவிற்கு அனுப்பியது. இந்த முன்னோடியான முயற்சி, அந்நாட்டின் உள்ளூர் பெண்களை தங்கள் தேசிய காவல் மற்றும் பாதுகாப்பு சேவைகளில் சேர ஊக்குவித்தது. இன்று, இந்திய பெண்கள் அமைதிப்படை வீராங்கனைகள் காங்கோ ஜனநாயகக் குடியரசு, அப்யேய் மற்றும் தென் சூடான் ஆகிய இடங்களில் சிறப்பாக பணியாற்றி வருகின்றனர். அவர்கள் சமூகங்களுடன்நம்பிக்கையைஉருவாக்குவதிலும், பாலின அடிப்படை யிலான வன்முறையைத் தடுக்கவும், பொதுமக்கள் பாதுகாப்பை வலுப்படுத்த வும் முக்கிய பங்கு வகித்து வருகின்ற னர்.

இவ்வாறான பணியமர்வுகளின் மூலம், அமைதிக்காப்பு மற்றும் அமைதிநிறுவலில் பெண்கள் வழங்கும் நேர்மையான பங்களிப்பு மற்றும் தாக்கத்தை இந்தியா வெளிப்படுத்தியுள்ளது. பெண்கள், சமூகங்களில் நம்பிக்கையை உருவாக்கி, குறிப்பாக பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு நம்பிக்கையை அளிக்கின்றனர். மிக முக்கியமாக, அவர்கள் பாலின அடிப்படையிலான வன்முறையை எதிர்கொள்ளவும், அமைதிக்கான வழிமுறைகள் சமூகத்தின் அனைத்து பிரிவுகளின் தேவைகள் மற்றும் பார்வைகளை பிரதிபலிக்கவும் உதவுகின்றனர். அத்துடன், மோதல் நிலப்பரப்புகளில் உள்ள பெண்களுக்கு, அவர்களும் தலைவர்களாகவும், அமைதி நிறுவர்களாகவும் ஆக முடியும் என்பதற்கான உதாரணமாக திகழ்கின்றனர்.

சமூக ஒற்றுமை ஒன்றிணைந்த ஆட்சி!

தேசிய அளவில், பெண்கள் முன்னேற்றத்திலிருந்து பெண்கள் தலைமையிலான முன்னேற்றம் என்ற இந்தியாவின் பயணம், எங்கள் சமூகத்தின் ஒவ்வொரு துறையையும் மாற்றியுள்ளது. இன்று, அடிப்படை மட்டத்தில் 14 இலட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக பணியாற்றுகின்றனர். மேலும், 23க்கும் மேற்பட்ட இந்திய மாநிலங்களும் ஒன்றிய பிரதேசங்களும், உள்ளூராட்சி மன்றங்களில் 50 சதவீத இடங்களை பெண்களுக்கு ஒதுக்கி உள்ளன. இது, சமூக ஒற்றுமை மற்றும் ஒன்றிணைந்த ஆட்சி ஒன்றை ஒன்று பூர்த்தி செய்யும் அம்சங்கள் என்பதை வலியுறுத்துகிறது.

இந்தியா, பெண்களுக்கான திறன் மேம்பாட்டு முயற்சிகளில், குறிப்பாக உலக தெற்கு நாடுகளிலிருந்து வரும் அமைதிப்படைப் பணியாளர்களுக்காக, தொடர்ந்து முதலீடு செய்து வருகிறது. புது டெல்லியில் உள்ள ஐக்கிய நாடுகள் அமைதிக்காப்பு மையம் (Centre for United Nations Peacekeeping), இன்று பாலின உணர்வுமிக்க பயிற்சிகளுக்கான உலகத் தரம் வாய்ந்த மையமாக உருவெடுத்துள்ளது.

அது, பெண்கள் அமைதிப்படை வீராங்கனைகளுக்காக முக்கிய பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்தி, அவர்களுக்கு இயக்கத்திட்டமிடல், பொதுமக்கள் பாதுகாப்பு, பாலியல் சுரண்டல் மற்றும் வன்முறைத் தடுப்பு, பாலின உணர்வுமிக்க தலைமைத்துவம் போன்ற துறைகளில் அத்தியாவசிய பயிற்சிகளை வழங்குகிறது. இவ்வாண்டின் தொடக்கத்தில், இந்தியா உலக தெற்கு நாடுகளிலிருந்து பெண்கள் அமைதிப்படை வீராங்கனைகளுக்காக நடத்தப்பட்ட முதல் வகையான சர்வதேச மாநாட்டை நடத்தி வரலாறு படைத்தது.

எதிர்காலத்தை நோக்கி நாம் முன்னேறிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு (WPS) திட்டத்தின் மீதான இந்தியாவின் அர்ப்பணிப்பு அசைக்க முடியாததாக உள்ளது. இந்தியா தனது கூட்டு நாடுகளுடன், குறிப்பாக உலக தெற்கு நாடுகளிலுள்ளவர்களுடன், தனது அறிவு, பயிற்சி, மற்றும் தொழில்நுட்பத்தை பகிர்ந்து கொண்டு, பொதுவான சவால்களுக்கு கூட்டாக தீர்வுகளை உருவாக்குவதில் தயாராக உள்ளது.

இவ்வாறு பி.வில்சன் எம்.பி. அவர்கள் பேசினார்.

தேனி வடக்கு மாவட்டச் செயல்வீரர்கள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் தங்கதமிழ்ச்செல்வன். எம்.பி. அறிக்கை!

தேனி, அக். 31 -

தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளரும் தேனி பாராளுமன்ற உறுப்பினருமான தங்கதமிழ்ச்செல்வன்.எம்.பி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு முதல மைச்சர் கழகத்தலைவர் அவர்கள் தலைமையில் 29102025 அன்று சென்னையில் நடைபெற்ற `என் வாக்கு சாவடி வெற்றி வாக்குசாவடி’ கூட்டத்தில் அறிவுறுத்தியதின்படி தேனி வடக்கு மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம்

இன்று (31.10.2025.வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் தேனி என்.ஆர்.டிமஹாலில் மாவட்ட கழக அவைத்தலைவர் பி.டி செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக, நகர் கழக, பேரூர், வார்டு, கிளைக்கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், பாக முகவர்கள் (BLA 2), பாக கமிட்டி உறுப்பினர்கள் (BLC), பாக டிஜிட்டல் ஏஜென்ட்கள் (BDA) உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகள்,கழக மூத்த முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள்,அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1.சிறப்புதீவிர வாக்காளர்திருத்தம். தொடர்பாக

2. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு தேனி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் தேனி பாராளுமன்ற உறுப்பினருமான தங்கதமிழ்ச்செல்வன் எம்.பி வேண்டுகோள் விடு த்துள்ளார்.

பசும்பொன் செல்லும் வழியில்

முதல்வருக்கு திருப்புவனம்-மானாமதுரையில் உற்சாக வரவேற்பு!

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் பல்லாயிரக்கணக்கில் கழகத்தினர் திரண்டனர்!

சிவகங்கை, அக்.31-

கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் நேற்று ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் முத்துராமலிங்க தேவர் 118 வது குருபூஜை விழாவில் கலந்து கொள்வதற்காக மதுரையில் இருந்து கார் மூலம் சென்றார்.

முதல்வர் தளபதி அவர்களுக்கு சிவகங்கை மாவட்ட கழகத்தின் சார்பில் மாவட்ட எல்கையான திருப்புவனம், மானாமதுரை பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் சிறப்பான உற்சாகமான வரவேற்பு தரப்பட்டது. முதலாவ தாக அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பட்டு வேட்டி புத்தகங்களை கொடுத்து முதல் வரை வரவேற்றார்.

அவரை தொடர்ந்து முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப.மதியரசன், எஸ்.மாரியப்பன் கென்னடி, மாவட்ட கழக அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், மாவட்ட துணை செயலாளர்கள் த.சேங்கை மாறன், திருமதி ஜோன்ஸ் ருசோ, செயற்குழு உறுப்பினர் தா. ராமையா, பொதுக்குழு உறுப்பினர்கள் பள்ளத்தூர் கே.எஸ். ரவி சோமசுந்தரம், ஜெ.மதார்சேட், த.உதயகுமார்,ஏ.ஆர்ஜெயமூர்த்தி, நகர்கழக செயலாளர்கள் க.பொன்னுச்சாமி, சி.எம்.துரை.ஆனந்த், பெரி.பாலா மாநகர செயலாளர்துணை மேயர் நா குணசேகரன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் திருமதி வசந்தி சேங்கைமாறன் சுப்பிரமணியன், எம்.ஏ. கடம்பசாமி, எம்.அண்ணாதுரை, துரை ராஜாமணி, முத்துச்சாமி, வே.தமிழ்மாறன், கா.வெங்கட்ராமன், ஆறு.செல்வராஜன், எம் .ஜெயராமன், திருமலை முத்துராமலிங்கம், பெ.மந்தக்காளை, ஆர். எம் .கென்னடி, வே.ஆரோக்கியசாமி யோக .கிருஷ்ணகுமார்,நாகனிரவி, வே .பூபால சிங்கம்,லெ.மு.ரவிச்சந்திரன், குன்னக்குடி சுப்பிரமணியன், நா.நெடுஞ்செழியன் , சே. சண்முக வடிவேல்,விராமதி மாணிக்கம், பூமணி , கே. பால சுப்பிரமணியன், கே.எஸ் .ஆனந்த்,சுப.சின்னத்துரை, முன்னாள் ஒன்றிய குழு தலைவர் லதாஅண்ணாத்துரை பேரூர் கழகச் செயலாளர்கள் க.நாகூர் கனி, ஜெயராமன், ஆர். கார்த்திகேயன், கே. பி. எஸ் .பழனி அப்பன், கதிர்வேல், ராசு ,அசோக், பிரம்மையா,பேருராட்சி மன்ற தலைவர் பி.ஏ நஜ்மூதீன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார் ,துணை அமைப்பாளர்கள் கே எம். பொற்கோ பரணி கிட்டு,ஆர். சேதுபதி ராஜா, கார்த்தி, எஸ். எம். மதிவாணன், மகாதீர்,மாவட்ட மாணவரணிஅமை ப்பாளர் கதி.ராஜ்குமார் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில் துணை அமைப்பாளர்கள் மார்க்ரெட் கமலா, திலகவதி கண்ணன், பாக்கியலட்சுமி, சித்ரா சண்முகப்பிரியா, எஸ்தர் மேரி, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ. வல்லபாய் ,மாவட்ட ஆதிராவிடர் நலக் குழு தலைவர் கொத்தமங்கலம் சேது, அமைப்பாளர் சிங்கமுத்து, மாவட்ட செய்தி தொடர்பாளர் அ. அயூப்கான்,மாவட்ட நெசவாளரணி அமைப்பாளர் மு . மு ரு கா ன ந் த ம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நாகர்கோவில் மாநகராட்சி மேயரின் வார்டான 4 வது வார்டுக்குட்பட்ட பெருவிளை பகுதியில் வார்டு அளவிலான சிறப்புக் கூட்டம் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநகராட்சி உதவி ஆணையர் பாலசுந்தரம், சுகாதார அலுவலர் பகவதி பெருமாள், சுகாதார ஆய்வாளர் வித்யா, மாநகராட்சி அதிகாரிகள், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் முகமது பஷீர், நாகர்கோவில் மாநகர மாணவர் அணி அமைப்பாளர் முஹம்மது ஸாலிஹ் உட்பட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

தென்காசியை அடுத்துள்ள ஆய்க்குடி

அமர்சேவா சங்கத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டு - குழந்தைகளுடன் உரையாடினார்!

கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. – அமைச்சர்கள் பங்கேற்பு!

தென்காசி, அக்.31-

ஆய்க்குடி அமர்சேவா சங்க மானது இந்த ஆண்டு தனது 45ம் ஆண்டு சேவைப் பயணத்தை கொண்டாடி வருகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் (29 ஆம் தேதி) முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்கள் ஆய்க்குடி சாலை நல்லமணி கல்லூரிக்கு கீழ்புறம் பெட்ரோல் பங்க் அருகில் உள்ள ஜாஸ் ஸ்மார்ட் சிட்டி மைதானத்தில் நடைபெற்ற அரசு நிகழ்வில் பங்கேற்று விட்டு மதியம் சுமார் 1.20 மணி அளவில் முதல்வர் மு.க ஸ்டாலின் அவர்கள் ஆயக்குடி அமர் சேவா சங்கத்திற்கு வருகை தந்தார். முதல்வர் அவர்களை அமர் சேவா சங்கத்தின் நிறுவனர் பத்மஸ்ரீ விருது பெற்ற எஸ். இராமகிருஷ் ணன்.சங்க இணைத் தலைவர் (ப்ரமோட்டர்) மற்றும் செயலாளர் எஸ்.சங்கரராமன் ஆகியோர் வரவேற்று கௌரவித்தனர்.

பின்னர் அவர்னஸ் அரங்கில் வைத்து அமர் சேவா சங்கம் தொழிற்பயிற்சி நிலையத்தில் பயின்ற நான்கு மாற்றுத் திறனாளி மாணவர்கள் சமீபத்தில் நடைபெற்ற முழு இந்திய அளவிலான தொழிற் பயிற்சி தேர்வில் தேசிய அளவில் வெற்றி பெற்று, பொதுவான மாணவர்களுடன் இணைந்து போட்டியிட்டு வெற்றி பெற்றது குறித்து முதல்வர் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தனர்.இது ஒன்றிணைந்த கல்வி மற்றும் திறனளிப்பு முயற்சிகளின் சிறந்த எடுத்துக் காட்டாக திகழ்கிறது.அத்துடன் அமர் சேவா சங்கத்தின் மாணவி அருண்மொழி,சங்கம் வழங்கிய பயிற்சி மற்றும் ஆதரவுடன், சமீபத்தில் எகிப்தில் நடைபெற்ற உலக மாற்றுத் திறனாளிகள் பவர் லிஃப்டிங் சாம்பியன்ஷிப் போட்டியில் வெண்கலப் பதக்கம் பெற்றமைக் காக அவரை முதலமைச்சர் அவர்கள் பாராட்டினார்.

தொடர்ந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சங்கத்தின் எதிர்கால வளர்ச்சி திட்டங்கள் குறித்த கோரிக்கை மனுக்களை பெற்று கொண்டு சங்கத்தின் மாணவர்கள்,ஊழியர்கள் மற்றும் பொது மக்களுடன் நெருக்கமாக உரையாடி.அவர்களின் சாதனைகளை வெகுவாக பாராட்டினார்கள்.

பின்னர் அமர் சேவா சங்க வளாகத்தில் பிரம்மாண்ட பந்தலில் அமர வைக்கப்பட்டிருந்த மாற்றுத்திறனாளி குழந்தைகள், சங்க மகளிர் சுய உதவிக்குழுவினர் அனைவரின் அருகிலேயே நடந்து சென்று அவர்களுடன் கை குலுக்கி முதல்வர் அவர்கள் உரையாடி மகிழ்ந்தார்கள். முன்னதாக அனைத்து குழந்தைகளும் வணக்கம் என்று உற்சாகமாக வரவேற்றனர்.

பின்னர் முதலமைச்சர் தென்காசி மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோரை அமர் சேவா சங்க ஆலோசனைக் குழுவின் தலைவராக நியமித்ததாக அறிவித்தார். இதன் மூலம் தமிழ்நாடு அரசு மற்றும் அமர் சேவா சங்கம் இடையேயான இணைந்த ஒத்துழைப்பும்,ஊக்கமும்,மேலும் வலுப்பெற்றது.அமர் சேவா சங்கத்தின் 45 ஆண்டுக் கொண்டாட்டக் காலத்தில் நடைபெற்றதில் முதலமைச்சர் அவர்களின் இந்த வருகை, சங்கத்தின் மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வு,ஒன்றிணைந்த கல்வி மற்றும் சமூக வலுப்படுத்தல் முயற்சிகளுக்கான அரசின் பாராட்டும் அங்கீகாரமும் ஆகியவற்றை வெளிப்படுத்தியது என்று மகிழ்ச்சி அடைந்தனர்.

நிகழ்வில் அமைச்சர்கள் கே.என் நேரு,ஐ.பெரியசாமி,கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்,தங்கம் தென்னரசு,பெ.கீதாஜீவன், மனோதங்கராஜ்,ராஜ கண்ணப்பன், கழக துணைப் பொதுச் செயலாளர் தூத்துக்குடியின் நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார்,மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோர்,தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன்,வடக்கு மாவட்ட செயலாளர் ஈ. ராஜா எம்.எல்.ஏ. ஆய்க்குடி பேரூராட்சி மன்ற தலைவர் சுந்தர்ராஜன்,துணைத் தலைவர் மாரியப்பன்,பேரூர் செயலாளர் சிதம்பரம்,சிவகிரி டாக்டர் சுமதி உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நெல்லை மேற்கு மாவட்டக் கழக அவசரச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் அறிவிப்பு!

நெல்லை, அக்.31-

நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க அவசர செயற்குழு கூட்டம் இன்று (31.10.2025) மாலை 5 மணிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அன்பு தளபதியார் அவர்களுடைய ஆணைக்கிணங்க திருநெல்வேலி மேற்கு மாவட்டம் (அம்பாசமுத்திரம் ஆலங்குளம் சட்டமன்ற தொகுதி) அவசர செயற்குழு கூட்டம் இன்று (31.

10.2025)மாலை 5 மணிக்கு மாவட்ட கழக அலுவலகம் டாக்டர் கலைஞர் அரங்கில் வைத்து எனது தலைமையில் நடைபெற உள்ளது. இந்த

அவசர செயற்குழு கூட்டத்தில் தொகுதிபார்வையாளர்கள்,மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் மாநில அணி, நிர்வாகிகள் ஒன்றிய,நகர, பேரூர் செயலாளர்கள், மாவட்ட வழக்கறிஞர் அணி மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் தவறாமல் பங்கேற்க கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1.கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 28/10/25 நடைபெற்ற என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச்சாவடி கூட்டம் சம்பந்தமாக. 2 கழக வளர்ச்சிப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் மாமன்னர் மருதுபாண்டியர் நினைவிடத்தில் முன்னாள் எம்.பி.மாநில மகளிரணி துணைச் செயலாளர் திருமதி பவானி ராஜேந்திரன் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.